தஞ்சை மாலை முரசு-திருச்சி பதிப்பு

★★★17-12-2017

## ஆயிர வைசியர் சமூகத்தை

# மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும்

## தமிழக அரசுக்கு கோரிக்கை

திருச்சி, டிச. 17– ஆயிர வைசியர் சமூகத்தை மிகவும்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று திருச்சியில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்து தீர்மானம் நிறைவேற்ற ப்பட்டது.

தமிழ்நாடு மாநில ஆயிர வைசியர் சங்கத்தின் 4–ம் ஆண்டு தொடக்க விழா திருச்சியில் நடைபெற்றது. கூட்டத்துக்கு திருச்சி மாவட்ட தலைவர் மணிவேல் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் பாண்டியன் வரவேற்றார். நிர்வாகிகள் சிவல் ரெங்கநாதன், குருநாதன், பாண்டியன், வைரம், பழனிவேல், முத்தையன், காசி விஸ்வநாதன், நல்லையன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் மாநில தலைவர் டாக்டர் கணேசனுக்கு பாராட்டு நடத்தப்பட்டது. விழாவில் சிறப்பு விருந்தினராக டாக்டர் அனுராதா கணேசன், கார்த்திகேயன் மணிமொழியன், டாக்டர் ஜெயராமன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



திருச்சியில் நடைபெற்ற தமிழ்நாடு மாநில ஆயிர வைசியர் சங்க ஆண்டு விழாவில், மாநில தலைவர் கணேசன் பேசிய போது எடுத்த படம். அருகில் நிர்வாகிகள் சீவல் ரெங்கநாதன், பாண்டியன், தாமோதரன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### தீர்மானங்கள்

கூட்டத்தில் ஆயிர வைசியர் சமூகத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர்பட்டியலில் சேர்க்க வேண்டும், சட்ட மன்ற தேர்தல், பாராளுமன்ற ராஜ்ய சபை உறுப்பினர், வாரிய தலைவர் பொறுப்புகளை சமூகத்தை சேர்ந்த பிரமுகர்கள் போட்டியிட வாய்ப்பளிக்க வேண்டும்.

மதுரையில் கண்ணகிக்கு கோட்டம் அரசு சார்பில் அமைக்க வேண்டும். சமூகத்தை சார்ந்த தமிழ் சான்றோர்களுக்கு அரசு விருதுகள் வழங்க வேண்டும் என்று பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முடிவில் மாவட்ட பொருளாளர் தாமோதரன் நன்றி கூறினார்.